# NEWBEC

NEW WAY OF BEING CHURCH | பொதுக்காலம் 32 ஆம் ஞாயிறு | 9 நவம்பர் 2025

**இலாத்தரன் பேராலய நேர்ந்தளிப்பு**

**எதிர்நோக்கிய திருப்பயணிகளாகக் கொண்டாடுதல், செவிமடுத்தல், மற்றும் பயணித்தல்**


மாதாந்திர நோக்கம் மற்றும் கருப்பொருள்: குடும்பம் (உடன் பயணம்)

கடவுளை மையமாகக் கொண்ட குடும்பங்களைக் கட்டியெழுப்புவதற்கான நம்பிக்கையையும் உறவுகளையும் வலுப்படுத்த அழைப்பு



# கடவுளை மையமாகக் கொண்ட குடும்பங்களிலிருந்து உயிருள்ள தண்ணீர் பாய்ந்துவருகிறது

நம்முடைய கருப்பொருள் நினைவிலிருந்து வாழ்வதற்கு நகர்கிறது. துணை நிற்பது என்பது கடவுள் நம்முடன் தங்கக்கூடிய இடத்தை உருவாக்குவதாகும். அனைத்து திருஅவையின் தாயும் தலையுமான இலாத்தரான் பேராலயம் கட்டிடக்கலைக்கு அப்பால் இறைஅழைத்தலைச் சுட்டிக்காட்டுகிறது. எசேக்கியேல் இறைவாக்கினர் கோவிலிலிருந்து தண்ணீர் பாய்ந்து பலனளிக்கும் வாழ்வின் தோட்டமாக மாற்றுவதைக் கண்டார். அதேபோல், நம் இல்லங்களிலிருந்து, அது கிராமங்களோ, அடுக்குமாடி குடியிருப்புகளோ அல்லது நகர்ப்புறமோ உயிருள்ள தண்ணீரின் நீரோடைகள் பாயவேண்டுமென்று நம் ஆண்டவர் விரும்புகிறார்.

உரக்கச் சொல்லப்படும் வேதாகம வார்த்தைகள். குழந்தைகள் மீது பொழியப்படும் மாலை ஆசீர், இவை யாவும் பதற்றத்தை குணப்படுத்தும் பொறுமையான உரையாடல்கள்.

இயேசு ஆலயத்தை தூய்மைப்படுத்துவது சமயத்தின்மீது அவர்கொண்ட கோபம் அல்ல துயரம். வழிபாட்டு இடத்தை வியாபார சந்தையாக மாற்றியது, நம்முடைய தல திருஅவை, நிபந்தனைக்குட்பட்ட அன்பின் சந்தையல்ல. என்னுடைய எதிர்ப்பார்ப்புகளை நீங்கள் நிறைவேற்றினால் நான் உங்களுக்கு இரக்கம் காட்டுவேன் என்பதல்ல - ஆனால் இரக்கம் தீர்ப்பை தலைகீழாக மாற்றும். மற்றும் நிபந்தனையால் உறவுகளை வடிவமைக்கமுடியாது; ஆனால் உடன்படிக்கையால் வடிவமைக்கப்படும் புனித இடம்.

புனித பவுல், நாம் கடவுளின் ஆலயம் என்றும் கிறிஸ்து மட்டுமே அதன் அடித்தளம் என்றும் கூறுகிறார். புனித 2 ஆம் ஜோன்போல் குடும்பத்தை ‘தலத்திருஅவை’ என்று அழைக்கிறார். மேலும் அன்பின் மகிழ்ச்சி (அமோரிஸ் லெட்டிசியா) 315 குடும்ப அன்பின் அருள்வாழ்வு ஆயிரக்கணக்கான சிறிய ஆனால் உண்மையான குறிப்புணர்த்தும் செயல்களால் உருவாக்கப்படுகிறது) அரிதாகவே தலைப்புச் செய்திகளில் இடம்பெறும் குறிப்புணர்த்தும் செயல்களிலிருந்து புனிதம் கட்டமைக்கப்படுகிறது என்று கூறுகிறார். பன்முகத்தன்மை கொண்ட மலேசியாவில் விருந்தோம்பல் என்பது ஒரு பணி. மின் தூக்கியில் செல்லும்போது மரியாதைக்குரிய ஒரு புன்னகை, அதிச, அண்டைவீட்டாரோடு பகிர்ந்துகொள்ளப்பட்ட உணவு, மற்றும் புலம்பெயர்ந்த ஒரு குடும்பத்திற்கு நம்முடைய செவிகொடுத்தல் ஆகியவை.

நாம் உணவருந்தும் மேசையிலோ அல்லது வரவேற்பு அறையிலோ நம்முடைய ஒன்றிணைந்த பயணம் தொடங்குகிறது. அவமதிப்பு இல்லாமல் கருத்துவேறுபாடுகளை எதிர்கொள்ளக் கற்றுக்கொள்கிறோம். மேலும் நாம் சத்தமில்லாமல் மூடிய கதவுகளை, மீண்டும் திறக்க தூய ஆவியாரை நம்மில் அனுமதிக்கிறோம். அத்தகைய வீடுகளிலிருந்து உயிருள்ள தண்ணீர் வழிந்தோடி, திருஅவைக்கு, பணியிடங்களுக்கு, ஆலயத்தின் கட்டிடத்தில் ஒருபோதும் கால்வைக்காதவர்களாக இருந்தாலும் நம்முடைய வரவேற்பின் மூலம் கடவுளின் கனிவை சுவைத்துப்பார்க்கப் பாய்கிறது.

**இந்த வாரம்:** இறைவேண்டல் இடத்தை ஓர் மூலையில் அமைத்து அல்லது புதுப்பித்து, சிறிது நேரம் இறைவேண்டல் செய்யுங்கள். உணவருந்தும்போது எந்த ஒரு சமூக ஊடக சாதனங்களையும் பயன்படுத்தாமல் உணவை ஒன்றாகப் பகிர்ந்துகொள்ளுங்கள்.

> எனது பெயர் என்றென்றும் போற்றப்படுமாறு இக்கோவிலை நான் தெரிந்தெடுத்துத் திருநிலைப்படுத்தியுள்ளேன்; என் கண்ணும் கருத்தும் இதன்மேல் எந்நாளும் இருக்கும்
>
> 2 குறிப்பேடு 7:16

### இன்றைய இறைவார்த்தை:

2 அரசர்கள் 5: 14-17

திருப்பாடல்: 98: 1-4

2 தீமோத்தேயு: 2: 8-13

லூக்கா 17: 11-19


INTERNAL CIRCULATION ONLY
BUL 45/2025

**Published by:** Archdiocesan Pastoral Institute (API) | **Email:** api@archkl.org